1968 மார்ச் 15]

திரு. ந. வீராசாமி: நெற்பயிர் இன்ஷூரன்ஸ திட்டத்தைக்கொண்டு வரும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தின் கீழ் இருந்தாலும், மோட்டார் இன்ஷூரன்ஸை தனியார் துறையினர் நடத்துவதுபோல் நெற்பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தையும் தனியார் துறையினர் எடுத்துக்கொள்ள முன் வந்தால் அந்த வகையில் இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இன்ஷூரன்ஸ் என்பதே மத்திய அரசாங்கம் நிறைவேற்றவேண்டிய ஒன்று. தனியார் துறையினர் நடத்துவதாக இருந்தாலும், அரசாங்க சார்பில் நடத்துவதாக இருந்தாலும் மத்திய அரசாங்கம் அனுமதிகொடுத்தாலொழிய நடத்த முடியாது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Crop Insurance is a very good and useful thing to agriculturists. So, will our Government write to the Central Government to constitute a Committee consisting of Agriculture Ministers of all States and thus come to a common decision?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அதற்காக கமிட்டி நிறுவவேண்டிய அவசியம் கிடையாது. மத்திய அரசாங்கத்திற்கு ராஜ்ய அரசாங்க சார்பில் வற்புறுத்தப்படும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்

* 226 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜீப்புகள் வழங்கப்படாத ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Primary Health Centres) மாலை நேரங்களிலும் செயல்படச் செய்யும் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: ஜீப் இல்லாத பிரைமரி சென்டர்களில் மாலை நேரங்களில் டாக்டர்கள் வந்து பார்ப்பதில்லை. அப்படி ஜீப் இல்லாத பகுதிகளிலாவது இருக்கின்ற பிரைமரி ஹெல்த் சென்டர்களை மாலை நேரங்களில் திறந்து வைக்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஜீப் இல்லாத இடங்களில் பஸ்களில் சென்று சப்-சென்டர்களைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று விதி இருக்கிறது. எங்கெங்கு டாக்டர்கள் அவ்வாறு நடக்கவில்லையோ அங்கெல்லாம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி.எஸ்.எஸ். மணி: இன்று ஒரு பிளாக்குக்கு ஒரே ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர்தான் இருக்கிறது. மக்கள் தொகை அடிப்படையில் பார்த்து மேலும் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டரை ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போட வேண்டும்.